# முடிவுரை

# முடிவுரை

ராஜம் கிருஷ்ணன், வல்சலா நாவல்களை ஒப்பாய்வு செய்து கிடைத்த செய்திகள், தெளிந்த உண்மைகள் இங்குக் கொடுக்கப்படுகின்றன.

ஒப்பிடும் இலக்கியங்களின் ஒத்த கூறுகளும், ஒவ்வாக் கூறுகளும் உலகளாவிய பார்வையாகப் பரிணமிப்பதை ஒப்பீடும் பயன்பாடும் என்ற இயலில் பார்த்தோம்.

ராஜம் கிருஷ்ணனுடையவும், வல்சலாவினுடையவும் தலைமைப் பெண் பாத்திரங்கள் தன்னம்பிக்கையுடன் எதையும் சாதிக்க வேண்டும் என்ற நிலையில் செயல்பட்டதை நாவல்கள் உணர்த்துகின்றன. வீரத்தன்மையும், சுதந்திரமான போக்கும், சார்ந்து நில்லாமல் இயங்கும் மனவலிமையை அப்பாத்திரங்களுக்குக் கொடுத்துள்ளன. இருந்தாலும் சூழ்நிலையின் வேகத்தால் தடுமாறவும் செய்கிறார்கள். எது வந்த போதும் மனதிடத்தைக் கைவிடாதவர்கள் தான் இரு நாவலாசிரியர்களினுடையவும் தலைமைப் பெண்பாத்திரங்கள்.

படைப்புக்களில் மெய்ம்மை நிலை உணர்த்தப்படும். கதா–பாத்திரங்களின் கூற்று, செயல், எண்ணம் இவற்றின் வெளிப்பாட்டால் அது அமையும். ராஜம் கிருஷ்ணனின் தலைமை ஆடவர் பாத்திரங்களும், வல்சலாவின் தலைமை ஆடவர் பாத்திரங்களும் பெண்களுக்குத் துணை நிற்கின்றனர். அவர்கள் வாழ்வில் வெற்றிபெறுவதற்கு உதவி செய்கின்றனர். சொல்லாலும் செயலாலும் எண்ணங்களை வெற்றிப்பாதையில் நடைபோடச் செய்கின்றனர்.

நம்பிக்கைகளும் சடங்குகளும் மனித வாழ்வுடன் ஒன்றிப் போயிருப்பவை. நாவல் படைக்கும் போது நாவலாசிரியர்கள் இந்த மரபு உண்மையை மனதில் கொண்டே அவற்றை எடுத்துக் கையாள்வர். ராஜம் கிருஷ்ணன் மூன்று விதமான மக்களின் நம்பிக்கைகளையும் சடங்குகளையும் பேசுகிறார். மரகதமலைவாழ் மக்கள், அளத்து மக்கள், கடலோர மக்கள் என மூன்று வித்தியாசமான நிலைகளைத் தன் நாவல்களில் தந்துள்ளார். வல்சலா வயநாட்டு மக்களின் நம்பிக்கைகள் சடங்குகளையும், மேலாளர்களு–டையவும் அடியான் அடியாத்திகளினுடையவும் நம்பிக்கைகள் சடங்குகளையும் தன் நாவலில் குறிப்பிட்டுள்ளார்.

யாருக்காகவோ தங்கள் உழைப்பைச் செலவாக்கி, சரியான ஊதியமும் பெறாமல் பட்டினியுடன் வாழும் ஏழை மக்களின் அவலநிலையை இரு நாவலாசிரியர்களும் சுட்டியுள்ளனர். நாகரிக மோகம் இன்றி அமைதியாக வாழ்ந்தவர்கள் இடையில் பணத்தாசை வந்து பகை வளர்ந்து உறவுகள் அழிகின்றன. அது ஆபத்தை விளைவிக்கும் என்றறிந்து பிறகு ஒன்று–சேருகின்றனர். ஒரே வேலைக்கு இரு கூலி வழங்கப்படும் நிலையும் வேலைக்கு வரும் பெண்களின் நலனழிக்கும் நிலையும் மனதை வாட்டு–கின்றன. உயிரைப் பணயம் வைத்துக் கடலில் போய் மீன் பிடித்து வருபவர்கள் கோயிலுக்கு வரி கட்டி மாய்ந்து போகிறார்கள். ஏழ்மையிலிருந்து ஏற்றமில்லாமலே இருக்கிறார்கள் என ராஜம் கிருஷ்ணன் விளக்கியுள்ளார். இங்ஙனம் பாடுபடுபவர்களின் வாழ்வில் மன அமைதியும் மகிழ்ச்சியும் வந்து அவர்களை வெற்றிபெற்ற மனிதர்களாக இதயங்களில் உலவ விட்டுள்ளார் ராஜம் கிருஷ்ணன்.

பசியின் கொடுமையை மறக்க அதிகமான இனிப்புச் சேர்த்து காபி குடித்தும் வெற்றிலை போட்டும் பார்க்கின்றனர். அது எவ்வளவு நேரம் தாக்குப்பிடிக்கும்? எனவே இருக்கும் போது நெல்லைப் பகிர்ந்துண்ணும் பாங்கு வயநாட்டு மக்களிடையே காணப்படுகிறது. இருப்பவர்கள் இல்லாத–வர்களுக்குக் கொடுத்த பின்னர் உண்டனர். உழைப்புக்கேற்ற ஊதியத்தைக் கேட்டுப் பெறத் தெரியாத அறிவிலிகள். ஆனால் பட்டினியை மாற்ற வேண்டும், ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். மேலாளர்கள் அடியான்களுடையவும் அடியாத்திகளினுடையவும் வாழ்வு முன்னேற மேம்பாட–டைய முன்வருகிறார்கள், செயல்படுகிறார்கள். அவதார புருஷர்களாக வாழ்ந்து காட்டுகிறார்கள். அதுபோல் மேலாளர்களும் அன்னதானம் செய்து அடியான் அடியாத்திகளினுடையவும் தீர்த்தாடனத்திற்கு வருபவர்களினுடையவும் பசியைப் போக்கவும் அன்னதானம் செய்திருக்கிறார்கள். பண்டிகைகளுக்கு உணவும் கொடுத்து புதுத்துணியும் கொடுத்துள்ளனர். இங்ஙனம் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வல்சலா எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

## எதிர்கால ஆய்வாளருக்குச் சிந்தனை

ராஜம் கிருஷ்ணன், வல்சலா நாவல்களில் காணப்படும் பெண் பாத்திரங்களைத் தனியாக ஆய்வுக்கு உட்படுத்தலாம். ஆடவர் பாத்திரங்கள் செய்யும் உதவிகளையும் துணைநிற்கும் பாங்கினையும் செயல்படும் முறை–யினையும் குறித்தும் ஆய்வு செய்யலாம். இரு நாவலாசிரியர்களினுடையவும் படைப்புக்களில் காணப்படும் சமுதாயக் கருத்துக்களையும் ஒப்பீட்டு ஆய்வு செய்யலாம்.